# 26-06-2024 செய்தி

## உச்ச வரம்பு மட்டுமே அளவுகோலா?

- 1992இல் இந்திரா சாஹ்னி எதிர் இந்திய அரசு வழக்கில் உச்ச நீதிமன்றம் அளித்த தீர்ப்பு, மாநில அரசுகளும் மத்திய அரசும் வழங்கும் இடஒதுக்கீட்டுக்கு 50% என்னும் உச்ச வரம்பை நிர்ணயித்தது.
- தமிழ்நாட்டில் மட்டுமே 69% இடஒதுக்கீட்டுக்குச் சட்டப் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.
- இந்நிலையில் நிதிஷ் குமார் தலைமையிலான பிஹார் அரசு 2022இல் சாதிவாரி மக்கள்தொகைக் கணக்கெடுப்பை நடத்தியது.
- அதன் முடிவுகள் வெளியான பிறகு இதர பிற்படுத்தப்பட்ட சமூகங்களுக்கு 12% லிருந்து 18% ஆகவும் மிகவும் பிற்படுத்தப்பட்ட சமூகங்களுக்கு (Extremely Backward Castes) 18% லிருந்து 25% ஆகவும் பட்டியல் சாதியினருக்கு 16% லிருந்து 20% பட்டியல் பழங்குடியினருக்கு 1% லிருந்து 2 % எனவும் இடஒதுக்கீட்டை அதிகரிக்கும் வகையில் இடஒதுக்கீடு சட்டத்தில் திருத்தம் மேற்கொண்டது பிஹார் அரசு.
- இதற்கு எதிரான கௌரவ் குமார் என்பவரும் வேறு சிலரும் தொடர்ந்த வழக்கு பாட்னா உயர் நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தது. ஒட்டுமொத்த மக்கள்தொகையில் பல்வேறு சமூகங்களின் விகிதத்தின் அடிப்படையில் அவற்றுக்கான இடஒதுக்கீடு அதிகரிக்கப்பட்டிருக்கிறதே அன்றி அந்தந்தச் சமூகங்கள் அரசுப் பணிகளில் போதுமான பிரதிநிதித்துவம் பெற்றிருக்கின்றனவோ என்கிற அடிப்படையில் இந்த இடஒதுக்கீடு வழங்கப்படவில்லை என்னும் மனுதாரர் தரப்பு வாதத்தை நீதிமன்றம் ஏற்றுக்கொண்டது.
- பொருளாதாரத்தில் நலிந்த முற்பட்ட வகுப்பினருக்கான 10%யும் சேர்த்து ஒட்டுமொத்த இடஒதுக்கீட்டின் அளவு 75% என்பது அரசமைப்புச் சட்டத்துக்கு எதிரானது என்றும் தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது.
- எந்த ஒரு சமூகப்பிரிவுக்கும் இடஒதுக்கீடு வழங்குவது அல்லது இடஒதுக்கீட்டின் அளவை அதிகரிப்பதற்கு முன் அது சமூகரீதியாகப் பிற்படுத்தப்பட்டிருப்பதையும், அந்தச் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் அரசுப் பணிகளில் போதுமான பிரதிநிதித்துவம் பெறவில்லை என்பதையும் தரவு பூர்வமாக நிறுவ வேண்டும்.
- மாறாக, வெறும் அரசியல் நோக்கங்களுக்காக இடஒதுக்கீட்டைப் பயன்படுத்துவது இடஒதுக்கீட்டின் ஆன்மாவைச் சிதைத்து விடும்.
- இந்தப் பின்னணியில்தான் தேசிய அளவில் மக்கள்தொகைக் கணக்கெடுப்புடன் சேர்ந்து சாதிவாரிக் கணக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்று திமுக உள்ளிட்ட அரசியல் கட்சிகள் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றன.
- ஆனால் இது அரசியல் நோக்கங்களுக்காகத் தவறாகப் பயன்படுத்தப்பட வாய்ப்பு உள்ளதாகச் சிலர் எதிர்ப்பு தெரிவிக்கின்றனர்.
- அதே நேரம் ‘அசாதாரணச் சூழல்களில்’ இடஒதுக்கீடு அளவை 50% க்கு மேல் அதிகரிப்பதற்கு இந்திரா சாஹினி தீர்ப்பு அனுமதிக்கிறது.
- பழங்குடியினர் போல தொலைதூரப் பகுதிகளில் வாழும் மக்கள் சமமான வாய்ப்புகளைப் பெறுவதற்குச் சில சிறப்பு சலுகைகள் வழங்கப்படுவது அவசியம் என்பதை அந்தத் தீர்ப்பு அங்கீகரிக்கிறது.

## பிரிட்டன் சிறையிலிருந்து அசாஞ்சே விடுவிப்பு

- விக்கிலீக்ஸ் இணையதள நிறுவனரும், அமெரிக்காவில் உளவுக் குற்றச்சாட்டை எதிர்கொண்டுள்ள வருமான ஜூலியன் அசாஞ்சே, பிரிட்டன சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளார்.
- அமெரிக்க அரசுடன் மேற்கொள்ளப்பட்டுள்ள ஒப்பந்தத்தின் கீழ் விடுவிக்கப்படும் அவர், அந்த நாட்டு நீதிமன்றத்தில் குற்றத்தை ஒப்புக் கொண்டு பின்னர் அவரது சொந்த நாடான ஆஸ்திரேலியாவுக்குத் திரும்புவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**விக்கிலீக்ஸ்**

- 52 வயதாகும் ஜூலியன் அசாஞ்சே நண்பர்களுடன் இணைந்து 2006 ஆம் ஆண்டில் விக்கிலீக்ஸ் இணையதளத்தைத் தொடங்கினார்.
- அந்த தளத்தின் மூலம், ஈராக் போரில் அமெரிக்க ராணுவம் மேற்கொண்ட அத்துமீறல்களை வெளிப்படுத்தும் ரகசிய விடியோ பதிவுகளை அவர் 2010 ஏப்ரலில் வெளியிட்டது பரபரப்பை ஏற்படுத்தியது.

**அமெரிக்க போர்**

- 2007-இல் நடத்தப்பட்ட பாக்தாத் வான்வழித் தாக்குதலின்போது ஹெலிகாப்டரில் இருந்தபடி, ராய்ட்டர் நிறுவன புகைப்பட செய்தியாளர் உள்பட அப்பாவி பொதுமக்கள் 18 பேரை அமெரிக்க வீரர்கள் சுட்டுக்கொன்ற காட்சிகள் அதில் இடம் பெற்றிருந்தன.

- அதன்பின்னர், 'ஆப்கன் போர் சுவடுகள்' என்ற தலைப்பில் 2004 முதல் 2009 வரை பரிமாறக் கொள்ளப்பட்ட 3.9 லட்சத்துக்கும் மேற்பட்ட அமெரிக்க ராணுவத்தின் போர் அறிக்கைகளை ஜூலியன் அசாஞ்சே வெளியிட்டார்.
- பின்னர் 2010- ஆம் ஆண்டு நவம்பர் மாதம் அவர் வெளியிட்ட தூதரக உரையாடல் பதிவுகள் உலக அளவில் அதிர்வலையை ஏற்படுத்தின.
- அந்தப் பதிவுகள் மூலம் ஐ.நா. அமைப்புக்கும் பிற உலகத் தலைவர்களுக்கும் எதிராக அமெரிக்கா உளவு பார்த்தது.
- அமெரிக்காவுக்கும் அதன் நட்பு நாடுகளுக்கும் இடையே நிலவிய உள்பூசல், உலகம் முழுவதும் நடந்துவந்த முறைகேடுகளை அமெரிக்க தூதரக அதிகாரிகள் ஆவணப்படுத்தியது.
- அரபு வசந்தம் என்ற பெயரில் மேற்கு ஆசிய நாடுகளில் அரசுகளுக்கு எதிராக போராட்டங்கள் வெடிப்பதற்கு அமெரிக்கா உதவியது போன்ற பல்வேறு ரகசியங்கள் வெளியே வந்தன.
- இது போன்ற ரகசிய ஆவணக் கசிவுகள் மூலம் அமெரிக்காவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்துவதாக ஜூலியன் அசாஞ்சே மீது குற்றஞ்சாட்டிய அமெரிக்க நீதித்துறையினர்.
- உளவு பார்த்ததாக அவர் மீது 2010-இல் குற்றவியல் வழக்கு பதிவு செய்தனர்.
- இதற்கிடையே பாலியல் குற்றச் சாட்டில் ஈடுபட்டதாக அசாஞ்சே மீது அதே ஆண்டில் ஸ்வீடனில் வழக்கு தொடரப்பட்டது. இந்த வழக்கின் கீழ், பிரிட்டன் வந்திருந்த அவரை ஸ்வீடனுக்கு நாடுகடந்த வேண்டுமென்று வலியுறுத்தி ஐரோப்பிய அளவிலான கைது உத்தரவை ஸ்வீடன் அதிகாரிகள் பிறப்பித்தனர்.
- ஸ்வீடனில் அசாஞ்சே மீது தொடரப்பட்டிருந்த பாலியல் குற்றவழக்கு திரும்பப் பெறப்பட்டது. எனினும் உளவுக் குற்ற விசாரணையை எதிர்கொள்ள அவரை தங்கள் நாட்டுக்கு நாடு கடத்த வேண்டும். அமெரிக்க அதிகாரிகள் தொடர்ந்து வலியுறுத்திவந்தனர்.
- இந்தச் சூழலில், ஆஸ்திரேலியா முன்னிலையில் அமெரிக்காவுக்கும் ஜீலியன் அசாஞ்சேவுக்கும் இடையே மேற்கொள்ளப்பட்டுள்ள ஒப்பந்தத்தின் கீழ் அவரை சிறையிலிருந்து பிரிட்டன் அதிகாரிகள் விடுவித்ததாக இரவு தகவல்கள் வெளியாகின.
- இந்த ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதற்காக பிரிட்டனிலிருந்து அமெரிக்காவின் வடக்கு மரியானா தீவில் உள்ள மாவட்ட நீதிமன்றத்துக்கு ஜூலியன் அசாஞ்சே அழைத்துச் செல்லப்படவிருக்கிறார்.
- அங்கு அவரிடம் விசாரணை நடத்தப்பட்டு, தண்டனை அறிவிக்கப்பட்டு, பின்னர் விடுதலை செய்யப்படுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## நாடாளுமன்ற வரலாற்றில் 2-வது முறையாக மக்களவை தலைவர் தேர்தல்

- முதன்முறையக மக்களவை தலைவர் பதவிக்கான தேர்தல் 1952-ம் ஆண்டு மே மாதத்தில் நடைபெற்றதாக வரலாற்று பதிவுகள் உள்ளன.
- இதில் தேர்வான கணேஷ் வாசுதேவ் மாவ்லேங்கர், நாட்டின் முதல் மக்களவை தலைவராகக் கருதப்படுகிறார்.
- இந்நிலையில் நாடாளுமன்ற வரலாற்றில், மக்களவை தலைவருக்கான தேர்தல் இரண்டாவது முறையாக நடைபெறுகிறது.
- அப்பதவிக்காக ஆளும் கட்சி விரும்பும் ஓம் பிரகாஷ், பிர்லா போட்டியிடுகிறார். எதிர்கட்சிகள் சார்பில் கே. சுரேஷ் போட்டியிடுகிறார்.
- மக்களவை தலைவர் என்பவர் நாடாளுமன்றத்தின் முதன்மையானவராகக் கருதப்படுகிறார். தேசிய அளவில் இவரது பதவிக்கான அந்தஸ்து, உச்சநீதிமன்ற நீதிபதிக்கு இணையாக ஆறாவது இடத்தில் உள்ளது.
- முதல் ஐந்து இடங்களில் குடியரசு தலைவர், துணை குடியரசு தலைவர், பிரதமர், மாநிலங்களின் ஆளுநர்கள் மற்றும் முன்னாள் குடியரசு தலைவர்கள், துணை பிரதமர் என்ற வரிசை உள்ளது.
- மக்களவை தலைவர் பதவிக்குப் போட்டியிட அவர் மக்களவை எம்பியாக இருப்பது தவிர குறிப்பிட்ட வேறு எந்த தகுதிகளும் கிடையாது.
- முன்னாள் துணை பிரதமரான ஜெகஜீவன்ராமின் மகளான மீரா குமார், மக்களவையின் முதல் பெண் சபாநாயகராக அமர்த்தப்பட்டார்.

வெற்றியின் முகவரி
SINCE 2006
SURESH' IAS ACADEMY